# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2054 • ஜூன் 03, 2023 — Weekly E-paper • June 07, 2023




## என்றுமே வாழ்வாய் நீ !

சுப.வீரபாண்டியன்

### நாடாளுமன்றத்திற்குப் புதிய கட்டடம் தேவையா?

பேராசிரியர்.மு.நாகநாதன்

### நீதிக்குப் போராடும் வீராங்கனைகள்!

தலையங்கம்

### என்ன நடக்கிறது மணிப்பூரில் ?

சாரதாதேவி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2054 • ஜூன் 03, 2023

Weekly E-paper • June 03, 2023


# என்றுமே வாழ்வாய் நீ !

**சுப.வீரபாண்டியன்**



காற்றிலும் புயலிலும் கனலிலும் புனலிலும்
கழகத்தைக் காத்தவன் நீ!
தூற்றுவார் வசைகளைத் துணைவரும் உரமென
மாற்றிடும் ஆற்றலும் நீ!
நேற்றுகள் அனைத்திலும் நினைவசை பாடியோர்
நேரிலே உனைக்கண் டால்
போற்றியே உனைப்பாடி புகழ்ந்திட வைத்திடும்
புதுக்கலை கற்றவன் நீ!

ஏட்டிலே எழுதுவார் எனினும் மேடையில்
ஏறவே அஞ்சிடு வார்!
பாட்டிலே வல்ல பாவலர் சிலரோ
பகைகண்டு பயப்படு வார்!
தீட்டுவார் ஓவியம் தெளிவுடன் பேசுவார்
திரையெனில் திகைத்துநிற் பார்!
ஏட்டிலும் பாட்டிலும் எழில்மிகு பேச்சிலும்
எதிலுமே வல்லவன் நீ!

நாற்பது ஆண்டுகள் நண்பராய் இருந்தவர்
நடுவழிப் பிரிந்தபோ தும்
ஏற்றதோர் கொள்கையை எரித்திட இங்கே
எமர்ஜென்சி வந்தபோ தும்
ஊற்றம் மிக்கவர் உன்தம்பி வைகோ
உனைவிட்டுப் போனபோ தும்
தோற்பதும் நெஞ்சம் துவள்வதும் இன்றி
தொடர்ந்தமா வீரன் நீ!

உன்னையே தலைவனாய் உளத்திலே வரித்திடும்
ஒருகோடித் தம்பியர் கள்
உன்னையே தந்தையாய் உளத்திலே நினைத்திடும்
ஒருகோடிப் பிள்ளையிங் கே!
உன்னையே இலட்சிய உலகமாய் எண்ணி
உணர்வுடை யாருமுண் டு!
என்னதான் குறைவு எப்போது மறைவு?
என்றுமே வாழ்வாய் நீ!

•

# நாடாளுமன்றத்திற்குப் புதிய கட்டடம் தேவையா?

பேராசிரியர்.மு.நாகநாதன்

கோடைக் காலத்தில் அனலைக் கக்கும் வெப்பக் காற்று, குளிர்காலத்தில் கடிக்கும் குளிர் ( biting cold as described by Delhi people) ஆகியன புதுதில்லியின் நிரந்தர அடையாளங்கள். சில ஆண்டுகளாகச் சுற்றுச்சூழல் பாதிப்பால் காற்றின் மாசு உச்ச நிலையைத் தொட்டுள்ளது.

பெருகி வரும் காற்றின் நச்சுத் தன்மையால் ஆண்டுதோறும் பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கும் நிலை உள்ளது. யமுனை நதி உலகின் 10 மாசு நிறைந்த நதிகளில் ஒன்றாக உள்ளது .

மனிதர்கள் வாழத் தகுதியற்ற இடமாக உள்ள புது தில்லியில் இருக்கின்ற நாடாளுமன்ற இடமே போதுமானது.

இந்திய ஒருமைப்பாடு என்பது உரத்த குரலில் ஒலிப்பதல்ல. பன்முக மக்களின் இணைவில் உயர்வதுதான் நாட்டின் ஒருமைப்பாடு.இந்த உயர்நெறிகள் பாசிச உணர்வுகளுக்குத் தெரியாது. அதனால் தான் எல்லா அரசியல் உயர் மரபுகளும் புதைகுழிக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.



தில்லியில் ஏழைகள் இஸ்லாமியர்கள் குடியிருப்புகள் இடிக்கப்படுகின்றன. புதிய நாடாளுமன்ற வளாகம் திறக்கப்படுகிறது.நல்ல வேளை நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற 18 எதிர்க் கட்சிகள் விழித்துக் கொண்டன. விழாவைப் புறக்கணிப்பு செய்துள்ளன.

சனாதன சங் பரிவாரங்களின் செருக்கு நிறைந்த, பேராதிக்க, அறிவற்ற, வெற்று முழக்கமிடுகிற அதிகாரக் குவியலின் அடையாளம் தான் இன்றைய ஒன்றிய அரசின் ஆட்சி முறை. ஜனநாயகத்தின் அனைத்துக் கூறுகளும் சரிந்து சாய்ந்து வருகின்றன.

புதிய நாடாளுமன்ற வளாகம் எழுகிறது! ஜனநாயகம் வீழ்த்தப்படுகிறது. எந்த ஜனநாயக நாட்டிலும் இது வரை காணாத அடாத செயல். சென்ற மாதத்தில் புதுதில்லியில் சனாதன ஆட்சி பீடத்தில் ஜனநாயகமும், கூட்டாட்சி இயலும் வெட்டிச் சாய்க்கப்பட்டுள்ளன. புதுதில்லி ஆம் ஆத்மி ஆட்சியின் சார்பில் முதல்வர் கெஜ்ரிவால் தொடர்ந்த வழக்கில், உச்ச நீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகளின் அமர்வு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்வருக்கு இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளை மாற்றும் அதிகாரம் உள்ளது என்று சில நாட்களுக்கு முன்பு தீர்ப்பு அளித்தது. உடனடியாக புதிய அவசரச் சட்டம் ஒன்றிய அரசால் பிறப்பிக்கப்பட்டு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு மாய்க்கப்பட்டது.

கடந்த 10 ஆண்டுகளாக நாடாளுமன்றத்தில் ஆக்கப்பூர்வமான விவாதங்கள் நடைபெறுவதில்லை என்பதைப் பல புள்ளிவிவர ஆய்வுகள் எடுத்துரைக்கின்றன.

1952 முதல் 1970 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு ஆண்டிலும் சராசரியாக நாடாளுமன்றக் கூட்டத்தில் பங்கேற்று விவாதம் செய்த நாட்கள் 121 ஆகும். 2000 ஆம் ஆண்டிற்குப் பிறகு ஆண்டு சராசரி நாட்கள் 68 ஆக விழுந்துவிட்டது. 1990ஆம் ஆண்டிற்குப் பிறகு ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதங்கள், துறை சார்ந்த விவாதங்கள் குறைந்து வருகின்றன. இன்றைய நாடாளுமன்ற உறுப்பினர்களில் 43 விழுக்காட்டினர் மீது குற்றவியல் வழக்குகள் உள்ளன. அவற்றில் 119 பாஜக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது குற்ற வழக்குகள் உள்ளன.

1993ஆம் ஆண்டிற்கு முன்னர் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுகிற சட்டங்களை அதற்கு முன்பாகவே உரிய முறையில் பல கட்சிகளைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆய்வு செய்து உரிய பரிந்துரைகளை வழங்குவதற்கு நிலைக்குழுக்கள் உருவாக்கப்பட்டன. இது நாடாளுமன்ற நடவடிக்கைகள் விரைந்து நடைபெறப் பல நிலைகளில் உதவியது.

ஆனால் 2004 ஆம் ஆண்டிற்குப் பிறகு 45 விழுக்காடு சட்ட வரையறைகள் தான் நிலைக்குழுக்களின் ஆய்விற்கு அனுப்பப்பட்டன.

அதானி மோசடிகளை விசாரணை மேற்கொள்வதற்கு நாடாளுமன்ற நிலைக்குழுவின் ஆய்விற்கு உட்படுத்த வேண்டும் என்று அனைத்துக் கட்சிகள் சார்பில் வேண்டுகோள் வைக்கப்பட்டது. பாஜக ஆட்சியால் இக்கோரிக்கை புறந்தள்ளப்பட்டது.

நீதித்துறை, சட்டம் இயற்றும் துறை ஆகிய தளங்களில் நிருவாகத்துறை, ஆக்கப்பூர்வமான அணுகுமுறையோடு செயல்பட்டால் தான் ஆட்சியியல் சீர் பெறும்.

நீதித்துறையுடன் மோதுதல், எதிர்க்கட்சிகளைப் பழிவாங்குதல், செய்தி தொலைக்காட்சி ஊடகங்களை அச்சுறுத்தல், நேர்மையாகச் செயல்படும் அரசின் உயர் நிலை அலுவலர்களைத் தவறான செயல்களுக்கு உறுதுணையாக இருக்க வலியுறுத்தல், ஒத்துப் போகாதவர்களைப் பழிவாங்குதல் ஆகியன மக்கள் விரோத, நாட்டு விரோத செயல்களாகும்.

இவை தான் இன்றைய பாஜக ஆட்சியின் இலட்சியம். நான் வைத்தது தான் சட்டம், ஆட்சி, நீதி என்பது பாசிசத்தின் உச்ச வடிவம். குடியரசுத் தலைவரைப் புதிய நாடாளுமன்ற வளாகத் திறப்பு விழாவிற்கு அழைத்துச் சிறப்பு செய்யாமல் புறக்கணிப்பது அரசமைப்புச் சட்டத்திற்கும் குடியரசு முறைக்கும் முற்றிலும் எதிரானதாகும்.

பழங்குடி இனத்தைச் சார்ந்த ஒரு பெண் தலைவரை அழைக்காதது தீண்டாமையாகும். அதுவும் காந்தியைச் சுட்டுக் கொன்ற கோட்சே வழக்கில் குற்றவாளி பட்டியலில் இடம் பெற்ற, விடுதலைப் போரில் பல மன்னிப்பு மடல்களைப் பிரித்தானிய ஆட்சியாளர்களிடம் அளித்து கெஞ்சி விடுதலை கோரிப் பெற்ற ஒரு மாபெரும் கோழை சாவர்க்கர் பிறந்தநாளில், அதுவும் விடுமுறை நாளான ஞாயிற்றுக்கிழமையில் புதிய நாடாளுமன்ற வளாகத்தைத் திறப்பது சனாதனத் திமிரின் உச்சமாகும்.

பாசிசம் வீழட்டும். கருணை இல்லா ஆட்சி கடுகி ஒழியட்டும். தனியுடைமை கொடுங்கோன்மை சாயட்டும். பொதுவுடைமை மலரட்டும்.!

(இணையத்தில் இருந்து......)

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !

கருஞ்சட்டைத் தமிழர்

## நீதிக்குப் போராடும் வீராங்கனைகள்!

உலகப் புகழ் பெற்ற ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் இந்திய ஒன்றியத்திற்குப் புகழ் சேர்த்து, தங்கம் உள்ளிட்ட பதக்கங்களை வென்றுவந்த வீராங்கனைகளின் கண்ணீர்த் துளிகள் டில்லியில் தெறித்துக் கொண்டிருக்கிறது.

இந்திய மல்யுத்தச் சம்மேளனத்தின் தலைவரும், பாரதிய ஜனதா கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான பிரிஜ் பூஷன் சிங் என்பவர் பாலியல் தொந்தரவு செய்ததாகச் சொல்லி, அவரைக் கைது செய்ய வலியுறுத்தி மல்யுத்தப் பதக்கங்கள் வென்ற வீரர்களான பஜ்ரங் புனியா, சாக்சி மாலிக், விக்னேஷ் போகட் தலைமையில் டில்லியில் போராடுகிறார்கள்.

பிரிஜ் பூஷன் சிங் பா.ஜ.கவைச் சேர்ந்தவர் என்பதால், மல்யுத்த வீராங்கனைகளின் அழுகுரல் மோடியின் காதுகளில் விழவில்லை. அதனால் பிரிஜ் பூசன் கைது செய்யப்படவில்லை.

நீதிமன்றத் தலையீட்டால் போக்சோ சட்டத்தில் வழக்குப் பதிவு செய்தும் கூட அவர் கைது செய்யப் படவில்லை.

பதக்கங்கள் வென்ற போது ‘மகளே, மகளே’ என்று அழைத்த மோடி, புதிய நாடாளுமன்றக் கட்டடம் திறப்பு அன்று அந்த வீராங்கனைகள் காவலர்களால் வலுக்கட்டாயமாகக் கைது செய்து இழுத்துச் செல்லும் போது திரும்பிக் கூடப் பார்க்கவில்லை.

நாட்டின் அரசியல் கட்சிகள், கிரிக்கெட் உள்ளிட்ட பிற விளையாட்டு வீரர்கள் எனப் பல்வேறு தரப்பில் இருந்தும் கண்டனங்கள் வருகின்றன. ஆனாலும் பயன் என்ன ?

ஒலிம்பிக் பதக்கங்களை கங்கையில் வீசுவோம் என்று அந்த வீராங்கனைகள் உத்ரகாண்ட், அரித்துவார் கங்கை நதிக்கே சென்றார்கள். இது ஒன்றியத்திற்குத் தலைகுனிவு என்றாலும், மோடி அசையக்கூட இல்லை.

இப்பொழுது களத்தில் இறங்கிய பஞ்சாப் விவசாயிகள் நடத்திய ‘பாப்’ பஞ்சாயத்தின் முடிவுப்படி ஜுன் 5 ஆம் தேதிக்குள் மல்யுத்த வீராங்கனைகளின் கோரிக்கைகள் ஏற்கப்படா விட்டால் டில்லிக்குள் பால் உள்ளிட்ட முக்கிய உணவுப் பொருள்கள் போகா வண்ணம் டில்லி எல்லைகளை முற்றுகையிடப் போவதாக ‘பாரதிய கிசான் யூனியன்’ அறிவித்து இருக்கிறது. சர்வதேச மல்யுத்தச் சங்கமும் விரைந்து முடிவு எடுக்காவிடில், அங்கீகாரத்தை ரத்து செய்வோம் என்று கூறி விட்டது.

இட்லர், முசோலினிகளின் தலைக்கேறிய சர்வாதிகார, பாசிச ஆணவத்தின் வீழ்ச்சியை மோடிக்கு யாராவது எடுத்துச் சொல்லுங்கள்.

இதோ... நீதி கேட்கும் மல்யுத்த வீராங்கனைகளின் அழுகையைப் பாருங்கள்!

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**

ஆசிரியர் குழு:
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**

வெளியீடு: திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408



சேலத்தில் 27-05-2023 அன்று இனமானப் பேராசிரியர் படிப்பு வட்டம் சார்பாக மூன்று புத்தகங்கள் (மதத்துக்கும் அறிவியலுக்குமான மோதலின் வரலாறு (தமிழாக்கம்) - ஓவியா ; பெரியாரின் போர்க்களங்கள் - இரா. சுப்பிரமணி; திராவிடம் : அரசியலும் அவதூறும் - வெற்றிச்செல்வன் ) அறிமுக நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்வில் தோழர்கள் கொளத்தூர் மணி, கா.சு. நாகராசன், ஜெயக்குமார் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்தினார்கள். மாவட்டப் பொறுப்பாளர்கள் மற்றும் படிப்பு வட்ட ஒருங்கிணைப்பாளர்கள் இணைந்து நடத்திய இந்நிகழ்வில் தோழர்கள் ஆ.லாரன்ஸ், மதிவாணன், எட்வின் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். தோழர் லோகபாலன் ‘கருஞ்சட்டைப் பதிப்பகம்’ நூல்களின் விற்பனையை மேற்கொண்டார்.



# என்ன நடக்கிறது மணிப்பூரில் ?

**சாரதாதேவி**

மணிப்பூர் கடந்த ஒரு மாதமாகப் பற்றி எரிந்து கொண்டு இருக்கிறது. 80 விழுக்காடு மலைகள் சூழ்ந்தும் நடுவே 20 விழுக்காடு பள்ளத்தாக்கும் கொண்ட இயற்கை எழிலும், அதை இன்னமும் விட்டுவைத்திருக்கும் மக்களும் கொண்ட வடகிழக்கு மாநிலம் மணிப்பூர். அதன் மக்களையோ அவர்களின் உணர்வுகளையோ அறியாத ஒரு குருட்டு அரசியலால் இன்று பற்றி எரிகிறது மணிப்பூர் என்றால் மிகையாகாது.

மலைகள், காடுகள் நிறைந்திருப்பதாலும், சீனா, மியான்மர், பங்களாதேசம் ஆகிய அந்நிய நாடுகள் சூழ்ந்திருக்கும் வடகிழக்கு எல்லை ஆதலாலும் கடந்த காலத்தில் அங்கு இந்திய இராணுவத்தின் அட்டூழியங்களுக்குக் குறைவில்லாமல் போனது. அதற்கு எதிர்வினையாக ஐரோம் ஷர்மிளா உள்ளிட்ட பெண்கள் போராட்டத்தில் குதித்ததும், இராணுவம் ஓரளவிற்கு விலக்கிக் கொள்ளப்பட்டது. தன் உண்ணாநிலைப் போராட்டத்தை விலக்கிக் கொண்ட ஷர்மிளா திருமணம் செய்து கொண்டதும், பின்னர் தேர்தலில் நின்று தோற்றுப் போனதும் நம் நினைவுகளில் இருக்கும்.

மணிப்பூரில் மூன்று இன மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். மியான்மரிலிருந்து ஒரு சில நூற்றாண்டுகளுக்கு முன் வந்து மணிப்பூரின் பள்ளத்தாக்குகளில் குடியேறிய மைத்திகள். மலைப் பகுதிகளில் பூர்வீகமாக வாழ்ந்து வரும் குக்கி மற்றும் நாக இன மக்கள்.

மைத்திகளின் மொழி தான் மைதிலி. அரசமைப்புச் சட்டத்தின் 8ஆவது அட்டவணையில் இடம்பெற்ற மொழி. மைத்திகள் தான் பெரும்பான்மையினர். 60 தொகுதிகள் கொண்ட சட்டசபையில் அவர்கள் 40 சட்டமன்ற உறுப்பினர்கள். ஓரளவு கல்வி, வேலைவாய்ப்பு, வசதிகள், அதிகாரம் என பிரிட்டிஷ் அரசுக்கு முன்பும், பிரிட்டிஷ் அரசிலும், நிலங்கள் மற்றும் வசதி வாய்ப்புகள் அதிகம் பெற்றவர்கள். அதனால் சுதந்திரத்துக்குப் பின்னர், பட்டியலின அல்லது இதர பிற்படுத்தப்பட்டோராக பதிவு செய்யப்பட்டுள்ளனர். அந்த இனத்தாரே இதுவரை எந்தக் கட்சியாக இருந்தாலும் முதல்வராக இருந்துள்ளனர்.

குக்கி இன மக்கள் மலைகளில் நாடோடிகளாக வாழ்பவர்கள். வசதிகளும் நில உடைமையும் குறைவானவர்கள். அவர்களுக்கு பழங்குடியின ஒதுக்கீடுகள் கொடுக்கப்பட்டு வந்துள்ளன. அவர்களுடைய சொற்ப நிலங்களை யாரும் வாங்க முடியாத சிறப்புச் சட்டங்களும் இருந்து வந்துள்ளன. மிஷினரிகளின் சேவையால் இவர்கள் பெரும்பாலும் கிறித்துவர்கள். இந்துத்துவத்திற்கு இந்த அரசியல் செய்ய கசக்குமா என்ன?

அங்கு 2017 வரை காங்கிரசு கட்சியும், மாநிலக் கட்சியுமே ஆண்டு வந்திருக்கின்றன. இரண்டாம் முறையாக சென்ற ஆண்டு பா.ஜ.க ஆட்சிக்கு வந்துள்ளது. குக்கி அரசியல் கட்சியின் கூட்டணியாலேயே வெற்றி பெற்ற பா.ஜ.க. அந்த மக்களுக்கே தீமை இழைக்க முடிவெடுத்துள்ளது.

சென்ற பிப்ரவரி மாதத்தில், ஆளும் பா.ஜ.க. அரசு, வனங்களைப் பாதுகாக்க ஒரு கணக்கெடுப்பு செய்கிறோம் என்ற போர்வையில், சோங்க்ஜோன் எனும் கிராமத்தில் வாழ்ந்து வந்த குக்கிகளை இடம் பெயரச் சொல்லி இருக்கிறது. சோங்க்ஜோன் கிராமம், இம்பாலா பள்ளத்தாக்கை ஒட்டிய சுரசந்தர் மாவட்டத்தில் உள்ளது. அரசே அவர்களின் வீடுகளை இடித்துள்ளது. அது நடக்கும்போதே, மணிப்பூர் உயர் நீதிமன்றத்தின் வழி, மைத்தி இனத்தையும் பழங்குடியினத்தில் சேர்க்க வேண்டும் என தீர்ப்பு வாங்கி இருக்கிறது.

கொதித்துப் போன குக்கி மாணவர் படையினர், தங்கள் மீதான இந்த இரண்டு தாக்குதல்களுக்கும் எதிர்வினையாக அந்த மக்களை வைத்து ஒரு பேரணியை மே3 அன்று சுரச்சந்தர் மாவட்டத்தில் நடத்தி உள்ளார்கள்.

எதுவுமே நடவாதது போல, அங்கு ஒரு உடற்பயிற்சிக் கூடத்தைத் திறந்து வைக்க வந்த முதல்வர் பைரன் சிங்கை முற்றுகையிட்ட குக்கி மக்கள், கூட்ட அரங்கையே அடித்து உடைத்துள்ளார்கள். அந்தக் கோபத்தில் தான் அந்த மக்கள் மீது கட்டற்ற வன்முறையை அவிழ்த்துவிட்டுள்ளது மணிப்பூர் அரசு.

மாநிலத்தில் இருந்து, கொஞ்ச காலம் இல்லாமல் இருந்த இந்திய இராணுவமும், அசாம் ரைஃபில் படையும் வரவழைக்கப்பட்டு, குக்கி இனப்பெண் கொல்லப்பட்டதாகப் புரளியைக் கிளப்பி விட்டிருக்கிறார்கள். இரண்டு பக்கமும் வன்முறை பற்றி எரிந்திருக்கிறது. இணையம், தொலை பேசி போன்ற தொலைத் தொடர்புகளைத் துண்டித்துவிட்டு, ஏறத்தாழ 75 பேரைச் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள்.



ஆஸ்திரேலியப் பயணம், புதிய நாடாளுமன்றத் திறப்பு என ஒன்றியப் பிரதமரின் முன்னுரிமைகள் மணிப்பூரில் மடிந்த உயிர்களின் மீது கவனம் வராமல் பார்த்துக்கொண்டன. எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு 29.05.23 அன்று, உள்துறை அமைச்சர் வந்தபோது, 40 பேரை உயிர்பலி வாங்கி,144 ஊரடங்கு போட்டு, முதல்வரும் அதிகாரிகளும் பேசி இருக்கின்றனர்.

அப்போதும் வன்முறை குறையவில்லை. ஒரு நாளைக்குப் பத்துப் பேர் வீதம் கொல்லப்படுவதாகச் செய்திகள் வருகின்றன. இப்போது அரசு வேறு கதை சொல்கிறது . இது இரு இனங்களுக்குள் நடைபெறும் சண்டையில்லை, அரசுக்கும் தீவிரவாதத்துக்கும் நடைபெறும் சண்டை என்கிறது.

பா.ஜ.க. வை நம்பி ஏமாந்து, தங்கள் உரிமைகளுக்காகப் போராடும் அந்த குக்கி மக்கள் தானே இப்போது தீவிரவாதிகள்? மைத்தி மக்களுக்கும் பழங்குடியினத் தகுதி கிடைத்துவிட்டால், குக்கிகளின் நிலங்களை வாங்குவதும், அவர்களின் வாய்ப்புகளை இன்னமும் பறிப்பதும் மைத்தி மக்களை ஆதிக்கவாதிகளாகவும், குக்கி மக்களை அகதிகளாகவும் மாற்றும்! இந்துத்துவம் ஒருபோதும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக நிற்காது என்பதற்கு இது மற்றொரு சான்று!

●